## TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Minutes of the Public Hearing Meeting of M/s. T.Ponnusamy Rough Stone and Gravel Quarry located at S.F.Nos. 679/A, 679/B(P), 680/A(P) & 680/B(P), Thennilai West Village, Pugalur Taluk, Karur District over an Extent of 4.23.80 Hectares held on 17.06.2025 at 11.00 A.M in Sri Lakshmi Mahal, No.4/61, Kodumudi Road, Thennilai Village, Pugalur Taluk, Karur District.**

**Participants**

1. Thiru. M. Kannan,
   District Revenue Officer,
   Karur District.
2. Er. V. Jayakumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Karur District.
3. Participants – As per List.

**District Environmental Engineer:**

The District Environmental Engineer in his welcome address on behalf of the District Administration and Tamil Nadu Pollution Control Board welcomed all the participant to attend the Public Hearing. Also, M/s. T. Ponnusamy Rough Stone and Gravel Quarry have applied to conduct a Public hearing regarding the quarrying. According to the Environmental Impact Assessment Notification, 2006 order, Public Hearing meeting of Public Hearing opinion for the above project has been made mandatory. So the Public Hearing meeting is being held on today's date. In this regard, an advertisement has already been made in Daily Thandhi on 13.05.2025 and The New Indian Express on 13.05.2025 in Tamil and English Newspapers and the copies of the Environmental Impact Assessment Report related to this project were placed for Public Hearing views at the District Collector's Office, District Industrial Centre and Panchayat Union Office a month ago. He also informed that the Public Hearing announcement about the meeting was made through loudspeaker, leaflets and posters on 13.06.2025

in Thennilai and surrounding villages. He also informed that the Draft EIA and Executive summary report in Tamil and English related to the said project has also been uploaded on the website of Tamil Nadu Pollution Control Board for Public Hearing viewing. Then asked the District Revenue Officer to preside over the meeting.

**District Revenue Officer:**

The District Revenue Officer, who presided over the address, welcomed the audience to the Public Hearing. He has informed that Public Hearing meeting for M/s.T.Ponnusamy Rough Stone and Gravel Quarry is being conducted as per Government Guidelines. He said that the information related to the project has already been uploaded on the websites. Then he asked the general Public to express their views clearly and concisely without any hesitation. He informed that all the opinions of the Public participating in this meeting will be forwarded to the government without any discrimination also He said that the project consultants will explain detailed information about the project to public.

**Project Proponent, Global Mining solutions:**

He welcomed all Departmental Government officials including District Revenue Officer and District Environmental Engineer, Press people, Environmentalists and Police Officers are gathered in the Public Hearing meeting. He explained the details of the proposed project as follows.

1. Salient Features of Quarry Project
2. Details of Quarry Project
3. Optimum area reporting
4. Mining project approval letter
5. 500 meter radius set quarry letter
6. Letter from Village Administrator
7. Synthesis quarry details within 500 meters radius
8. Proposed Quarry Location Description
9. Satellite of quarry area and surface plan drawing of quarry
10. Quarry Site Analysis
11. Pattern of Land Use of Quarry Project
12. Plan of Proposed Green Ring
13. Quarry Production Process Chart
14. Ecosystems within 10 km radius
15. Map covering a radius of 10 km around the project area

16. Current environmental conditions
17. Socio-Economic Environment
18. Environmental Monitoring Details
19. Nature of air
20. Nature of water
21. Study of volume
22. Nature of soil
23. Terrain (interstellar region)
24. Biological environment
25. Anticipated environmental impact and preventive measures
26. Anticipated climate impact and preventive measures
27. Anticipated hydrological impact and preventive measures
28. Anticipated noise impact and preventive measures
29. Anticipated environmental impact and preventive measures
30. Proposed Disability Cost Estimate
31. Environmental Monitoring Scheme
32. Conclusion

**District Environmental Engineer:**

He asked the Public to register their name and address and give their views on the project accordingly.

1. **Mrs. Rukmani, Koonampatti:**

She greeted everyone present in the Meeting. She informed that she welcomed the project and informed that there is no objection from her side for the project.

2. **Mr. Gopi, Koonampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

3. **Mr.Thangavel, Karaithottam:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

4. **Mr.B. Sampath, Forward Block Party, Paramathi:**

He greeted everyone present in the Meeting. He informed that due to the establishment of quarry a considerable employment opportunities may be created for the nearby residences. He also informed that abundant construction, raw materials would be effectively utilized as a result of this project. Hence he welcomed the project.

5. **Mr.Balasubramani, Koonampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

6. **Mr. Chandrasekhar, Koonampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

7. **Mr.Sennithurai, Koonampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

8. **Mr.Natarajan, Karaivalasu:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

9. **Mr.Sakthivel, Thennilai:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

10. **Mr. K. Paramasivam, K. Paramathi:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

11. **Mr.G. Venugopal, Thennilai:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

12. **Mr. M. Srinivasan, Thennilai:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

13. **Mr.Thirumoorthy, Thennilai:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

14. **Mr.Saravanakumar, Koonampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

15. **Mr.Aditya, Koonampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

16. **Mr.Dhanapal, Thennilai:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

17. **Mr.Selvaraj, Nochchikattuvalasu:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

18. **Mr.Nataraj, Kullampalayam:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

19. **Mrs.Lalitha, Thottiyapatti:**

She greeted everyone present in the Meeting. She informed that there is no objection from her side for the project.

20. **Mr.Balaji, Thennilai:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

21. **Mr.Gopalgandhi, Thennilai:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

22. **Mr.R.Sethu, Puliyampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that his agricultural well is located at a distance of 300 meters form the proposed quarry site. He raised his fear that his agricultural activity will get affected due this project. However the issue of Environmental Clearance may be decided by competent authorities.

23. **Mr.N. Indramukhi, Puliyampatti:**

He greeted everyone present in the Meeting. He informed that he is residing in the nearby village depending on agriculture and live-stocks for his livelihood; due to establishment of the quarry activities he could not tolerate the toxic emissions from the quarry. He further raised his concern that there may be a chance of health related issues for his live-stocks and he also added that significant amount of dust emission from the quarry gets deposited in the Agricultural lands, which is adversely affecting both crops and live-stocks. Hence he opposed the project.

24. **Mr. R. Gauthaman, Tukkatchi:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

25. **Mr. P. Manivel, Puliyampatti:**

He informed that the project should not be implemented in his area. Due to the project the building, thatched houses will get demolished due to the vibration from the quarry. He also added that his area is already getting worst in landscape. Definitely one day or other day it may eventually turn into a desert. He also raised a question that what will be the status of nearby forest area due to this project. The officials should inspect the ground reality. However the issue of Environmental Clearance may be decided by competent authorities.

26. **Mr. S. Senthilkumar, Pungamarathottam:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

27. **Mr. R. Rajesh, Karaithottam:**

He greeted everyone present in the Meeting. He informed that there is no objection from his side for the project.

28. **Mr.V.N. Chinnasamy, Velayudhampalayam:**

He greeted everyone present in the Meeting. He informed that he is representing the meeting on behalf of Tamil Nadu farmer's protection party. He expressed his concern that most of the participants blindly accepting and welcoming the project without proper awareness. He stated that he is 78 years old and expressed that recalled the area was once fertile with crops like, jowar, maize, and finger millet, but now the entire agricultural activities and live-stocks have been affected due to the quarry activities. Also already most of the villages have been severally affected. Hence it is requested that there may not be any further degradation in future. He also informed that the unit authorities had concealed the existence of a village within 500 meters radius. He claimed to possess evidence supporting this and stated that he is willing to submit it before a court of law if required by the competent authorities. He also declared that he has intention to approach the court in the future if necessary.

29. **Mr.Raja, Koonampatti:**

He greeted everyone present in the Meeting. He is representing the meeting on behalf of Tamil Nadu farmer's protection party. He informed that a bore well and a pumping station are located close proximity to the proposed site but officials have concealed these details.There is a stream flowing nearby this site but like this many critical details have been omitted from the project report. Hence, he opposed the project.

30. **Mr.V.SenthilKumar, Puliyampatti:**

He greeted everyone present in the Meeting. He is engaged in farming at Thennilai West village at S.F.No.426, 656 & 658 and the land will definitely get affected due to this proposed project. He further mentioned that the public and live-stocks are experiencing lot of significant inconvenience and health issues due the explosives. Especially during the evening hours, people are suffering from breathing troubles and the affected live-stocks are sold out for marginal prices. Hence he strongly oppose granting permission for the proposed project. He said that if permission is granted to this project definitely he would surrender his both Aadhar card and Ration card as an agitating against the project.

31. **Selvi. S. Revathi, Puliyampatti:**

She greeted everyone present in the Meeting. She is a graduate with three degrees but currently she is unemployed. She stated that she is involved in agricultural activities. She further informed that the villager's live-stocks and the Environment get Deteriorated due to the quarry operations. She questioned whether people are expected to consume sand and stone instead of food. She strongly opposed the project and raised her objection.

The District Environmental Engineer mentioned that the views of the public opinion at this meeting will be recorded in video and Attendance details would be sent to the State Environmental Impact Assessment Authority Chennai.

**District Environmental Engineer:**

Finally, In his concluding vote of thanks, He expressed his sincere gratitude on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board to the Government Officials including the revenue commissioner, the police, journalists and the public who presided over this public opinion meeting. Finally the meeting concluded with the playing of the National Anthem also, the Public Hearing meeting was completed.

**District Environmental Engineer ,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Karur District.**

**District Revenue Officer,**
**Karur District.**

## **தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

**கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், தென்னிலை கிராமம், கொடுமுடி சாலை, எண்.4/61, ஸ்ரீ லட்சுமி மஹாலில் 17.06.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெற்ற கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், தென்னிலை மேற்கு கிராமம், புல எண். 679/A, 679/B(P), 680/A(P) & 680/B(P)-ல் 4.23.80 ஹெக்டர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள்.T. பொன்னுசாமி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டப் பணிக்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

**பங்கு பெற்றோர்:**

1. திரு. ம.கண்ணன்,
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   கரூர் மாவட்டம்.

2. பொறியாளர். வெ. ஜெயக்குமார்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   கரூர்.

3. பொதுமக்கள்– (இணைப்பில் உள்ளபடி)

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தனது வரவேற்புரையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக, பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு கலந்து கொள்ள வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்பதாக கூறினார். மேலும், தி/ள்.T. பொன்னுசாமி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தினை நடத்தி தருவதற்காக விண்ணப்பம் செய்திருந்தனர். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, 2006 உத்தரவின்படி, மேற்படி திட்டத்திற்கு பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டு அறிவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. எனவே இன்றைய தேதியில் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது. இது தொடர்பாக ஏற்கனவே 13.05.2025 நாளிட்ட தினந்தந்தி தமிழ் நாளிதழ் மற்றும் 13.05.2025 நாளிட்ட தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது எனவும், இந்த திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் நகல்கள் ஒரு மாதத்திற்கு முன்பாகவே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட தொழில் மையம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் உள்ளிட்ட இடங்களில்

பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார். மேலும், கூட்டத்தை பற்றிய பொது அறிவிப்பு ஒலி பெருக்கி, துண்டு பிரசுரம், சுவரொட்டி மூலமாக 13.06.2025 அன்று தென்னிலை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். மேலும், மேற்படி திட்டம் தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில சுருக்கு அறிக்கை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

**மாவட்ட வருவாய் அலுவலர்:**

தலைமை உரையாற்றிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வந்த அனைவரையும் வரவேற்றார். தி/ள்.T. பொன்னுசாமி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக தென்னிலை மேற்கு கிராமத்தில் புல. எண். 679/A, 679/B(P), 680/A(P) & 680/B(P–ல் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் அரசு வழிகாட்டுதலின்படி நடத்தப்படுவதாக தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எவ்வித தயக்கமின்றி தெளிவாகவும், சுருக்கமாகவும் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் அனைத்து கருத்துக்களும் எவ்வித பாகுபாடுமின்றி அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் இத்திட்டம் தொடர்பான தகவல்களை விளக்கக் காட்சியாக நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் தற்போது உங்களுக்கு விளக்கமாக தெரிவிக்க உள்ளனர் என்று தெரிவித்தார்.

**சுற்றுச்சூழல் ஆலோசகர், குளோபல் மைனிங் சொல்யூசன்ஸ்:**

இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்களையும் பத்திரிக்கை நண்பர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் மற்றும் காவல்துறை அதிகாரிகளையும் வரவேற்பதாக தெரிவித்தார். இவர் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு விவரித்தார்.

1. குவாரி திட்டத்தின் முக்கிய அம்சங்கள்
2. குவாரி திட்டம் பற்றிய விபரம்
3. உகந்த பகுதி அறிக்கை
4. சுரங்க திட்டம் அங்கீகாரம் கடிதம்
5. 500 மீட்டர் சுற்றளவு தொகுப்பு குவாரி கடிதம்
6. கிராம நிர்வாகியின் கடிதம்

7. தொகுப்பு குவாரி விவரங்கள் 500 மீட்டர் சுற்றளவில்
8. முன்மொழியப்பட்ட குவாரி இருப்பிட விளக்கம்
9. குவாரி பகுதியின் செயற்கைக்கோள் & குவாரியின் மேற்பரப்பு திட்ட வரைப்படம்
10. குவாரி தள பகுப்பாய்வு
11. குவாரி திட்டத்தின் நிலப்பயன்பாட்டின் முறைமை
12. முன்மொழியப்பட்ட பசுமை வளையத்தின் திட்டம்
13. குவாரி உற்பத்தி செயல்முறை விளக்கப்படம்
14. 10 கி.மீ சுற்றளவு சுற்றுச்சூழல் அமைப்புகள்
15. திட்டப்பகுதியைச் சுற்றி 10 கி.மீ சுற்றளவில் உள்ளடக்கிய வரைபடம்
16. தற்போதைய சுற்றுச்சூழல் நிலைமைகள்
17. சமூக பொருளாதாரச்சூழல்
18. சுற்றுச்சூழல் கண்காணிப்பு விவரங்கள்
19. காற்றின் தன்மை
20. நீரின் தன்மை
21. ஒலி அளவின் ஆய்வு
22. மண்ணின் தன்மை
23. நிலச்சூழல் (இடைநில பகுதி)
24. உயிரியல் சூழல்
25. எதிர்நோக்கும் சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
26. எதிர்நோக்கும் காற்றுச்சூழல் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
27. எதிர்நோக்கும் நீர்ச்சூழல் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
28. எதிர்நோக்கும் ஒலிச்சூழல் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
29. எதிர்நோக்கும் நிலச்சூழல் தாக்கம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள்
30. முன்மொழியப்பட்ட CER செலவு மதிப்பீடு
31. சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம்
32. முடிவுரை

**<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>**

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியினை பதிவு செய்துவிட்டு இத்திட்டம் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு கூறினார்.

1. **திருமதி. ருக்மணி, கூனம்பட்டி:**

அனைவருக்கும் வணக்கம். தென்னிலை மேற்கு கிராமம் கூனம்பட்டியில் வசித்து வருகிறேன். T. பொன்னுச்சாமி அவர்களின் கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

2. **திரு.கோபி, கூனம்பட்டி:**

அனைவருக்கும் வணக்கம். தென்னிலை மேற்கு கிராமம் கூனம்பட்டியில் வசித்து வருகிறேன். T. பொன்னுச்சாமி அவர்களின் கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

3. **திரு. தங்கவேல், கரைத்தோட்டம்:**

அனைவருக்கும் வணக்கம். தென்னிலை கிழக்கு கிராமத்தில் வசித்து வருகிறேன். T. பொன்னுச்சாமி அவர்களின் கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

4. **திரு.B.சம்பத், பார்வேர்டு பிளாக் கட்சி, K.பரமத்தி:**

இந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளஅனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். T. பொன்னுச்சாமி சாதாரண கல் மற்றும் கிராவல்–குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று எங்களின் அகில இந்திய பார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இந்த நிறுவனத்தினால் சுற்றுவட்டாரப் பகுதியில் இருக்கக்கூடிய பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பும், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கட்டுமானத் தொழிலுக்கு மூலப்பொருட்கள் கிடைப்பதாலும் இந்தப் பொன்னுச்சாமி சாதாரண கல் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கலாம் என்று எங்களின் கட்சி சார்பாக கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

5. **திரு.பாலசுப்பிரமணி, கூனம்பட்டி:**

கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

6. **திரு.சந்திரசேகர், கூனம்பட்டி:**

அனைவருக்கும் வணக்கம். கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

7. **திரு.சென்னித்துரை, கூனம்பட்டி:**

அனைவருக்கும் வணக்கம். T. பொன்னுச்சாமி சாதாரண கல் மற்றும் கிராவல்–குவாரிக்கு அனுமதி வழங்கலாம். கல்குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**8. திரு.நடராஜன், கரைவலசு:**

அனைவருக்கும் வணக்கம். T.பொன்னுச்சாமி சாதாரண கல் மற்றும் கிராவல்–குவாரி நல்லமுறையில் செயல்படுகிறது. எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**9. திரு.சக்திவேல், தென்னிலை:**

அனைவருக்கும் வணக்கம். T.பொன்னுச்சாமி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு அனுமதி வழங்கலாம். எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**10. திரு.K.பரமசிவம், க.பரமத்தி:**

அனைவருக்கும் வணக்கம். T.பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம். எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**11. திரு.G. வேணுகோபால், தென்னிலை:**

அனைவருக்கும் வணக்கம். T.பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்றார்.

**12. திரு.M. சீனிவாசன், தென்னிலை:**

அனைவருக்கும் வணக்கம். T.பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம். எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**13. திரு.திருமூர்த்தி, தென்னிலை:**

அனைவருக்கும் வணக்கம். T.பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

**14. திரு.சரவணகுமார், கூனம்பட்டி:**

தென்னிலை மேல்பாகம் கூனம்பட்டியில் வசிக்கிறேன். T. பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்றார்.

**15. திரு.ஆதித்யா, கூனம்பட்டி:**

அனைவருக்கும் வணக்கம். T. பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றார்.

**16. திரு.தனபால், தென்னிலை:**

அனைவருக்கும் வணக்கம். T. பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

**17. திரு.செல்வராஜ், நொச்சிக்காட்டுவலசு:**

அனைவருக்கும் வணக்கம். T. பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**18. திரு.நடராஜ், குள்ளம்பாளையம்:**

அனைவருக்கும் வணக்கம். T.பொன்னுச்சாமி கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**19. திருமதி.லலிதா, தொட்டியபட்டி:**

அனைவருக்கும் வணக்கம்.T. பொன்னுச்சாமி கல்குவாரிக்கு கல்உடைப்பதற்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**20. திரு.பாலாஜி, தென்னிலை:**

அனைவருக்கும் வணக்கம். கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**21. திரு.கோபால்காந்தி, தென்னிலை:**

அனைவருக்கும் வணக்கம். இந்நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**22. திரு.R. சேது, புளியம்பட்டி:**

அனைவருக்கும் வணக்கம். எனது கிணறு 300 மீட்டர் தூரத்தில் உள்ளது. இதனால் விவசாயம் பாதிக்கப்படும். இதற்குமேல் அனுமதிகொடுப்பது உங்கள்விருப்பம் என்று கூறினார்.

**23. திரு.N.இந்திரமுகி, புளியம்பட்டி:**

அனைவருக்கும் வணக்கம். நான் ஆடு, மா்டுகளை வைத்து விவசாயம் செய்து வருகின்றேன். மாலை 6 மணிக்கு வெடிவைத்தால் ஒருமணிநேரம் எங்களால் நச்சுப்புகை தாங்க முடிவதில்லை. எங்களுக்கும் ஆடு, மாடுகளுக்கும் ஏதேனும் நோய்வரலாம். தட்டினால் பவுடர் அதிகமாகப் பறக்கின்றது. ஆடு, மாடுகள் இலைகளை உண்ணும்போது நோய்வாய்படுகிறது. அதனால் இந்நிறுவனத்திற்கு அனுமதி வேண்டாம் என்று கூறினார்.

**24. திரு.R. கௌதமன், துக்காச்சி:**

கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

**25. திரு.P.மணிவேல், புளியம்பட்டி:**

கல்குவாரி அமையக்கூடாது. ஏனெனில் மக்கள் குடிக்கின்ற குடிநீர் பாதிக்கப்படுகின்றது. குடிசை வீடு, கட்டிடங்கள் விழுந்துவிடலாம். ஆனால் கட்டிடத்திற்காக எம்சாண்ட், ஜல்லி பயன்படுத்தாமல் இருக்கலாம். இதேநிலை தொடர்ந்தால் எம்சாண்ட், ஜல்லி இரண்டையும் உண்ணும் நிலைமைதான் வரும். விவசாயம் செய்யமுடியாது. இப்பொழுது காடு சுடுகாடு மாதிரி உள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டால் நான் கூறுவது உண்மையா ?, பொய்யா ? என்று தெரியும். கிரஷருக்கு அருகில் உள்ள காடுகளின் நிலை என்ன ? என்று நேரில் சென்று பாருங்கள். இதற்குமேல் அதிகாரிகளின் விருப்பம். மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. இது கண்துடைப்பிற்காகத்தான் என்றார்.

26. <u>திரு.S.செந்தில்குமார், புங்கமரத்தோட்டம்:</u>

கல்குவாரிக்கு அனுமதி கொடுக்கலாம் என்று கூறினார்.

27. <u>திரு.R.ராஜேஷ், கரைத்தோட்டம்:</u>

கல்குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

28. <u>திரு.V.N.சின்னசாமி, வேலாயுதம்பாளையம்:</u>

அனைவருக்கும் வணக்கம். தமிழக விவசாயிகள் பாதுகாப்பு இயக்கம் சார்பில் பேசுகிறேன். கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு ஒருவரியில் ஆட்சேபனை இல்லை என்று கூறுகிறார்கள். எனக்கு கிட்டத்தட்ட 78 வயதாகிவிட்டது. இந்தப் பகுதியில் சோளம், கம்பு, ராகி என்று பயிர் செய்துவந்தோம். விவசாயம் முற்றிலும் அழிந்துவிட்டது. ஆடு, மாடு வைத்துக்கொண்டு விவசாயம் செய்வார்கள். இப்பொழுது விவசாயம் காணாமல் போய் விட்டது.

தூசு இவ்வாறு தொடர்ந்து பரவுவதால் தென்னிலை கிராமம் அழிந்துவிட்டது. மீண்டும் அழிய வேண்டாம். விவசாயம் 500 மீட்டருக்குள் இருப்பதை மறைத்துள்ளார்கள். உண்மைக்கு புறம்பாக கூறுகிறார்கள். நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளது. ஆதாரங்களை காட்ட நான் தயாராக உள்ளேன். மீண்டும் நீதிமன்றம் செல்லத் தயாராக உள்ளேன் என்று கூறினார்.

29. <u>திரு.ராஜா,கூனம்பட்டி:</u>

அனைவருக்கும் வணக்கம். மாவட்டத் தலைவர் ராஜா, தமிழக விவசாய பாதுகாப்பு இயக்கம். பொன்னுச்சாமி குவாரிக்கு கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குவாரி அமைக்கும் இடத்திலிருந்து ஆழ்துளை கிணறு மற்றும் நீரேற்றும் நிலையம் உள்ளது. அதை மறைத்து அதிகாரிகள் பொய்யான தகவல்களைக் கொடுத்துள்ளார்கள். ஓடைகள் செல்கிறது. ஓடைகள் மறைக்கப்பட்டிருக்கிறது. பல தகவல்கள் மறைக்கப்பட்டு பொய்யான தகவல்களை ஆய்வு செய்து அனுமதி கொடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

30. <u>திரு.V.செந்தில்குமார், புளியம்பட்டி:</u>

அனைவருக்கும் வணக்கம். நான் தென்னிலை மேல்பாகத்தில் விவசாயம் செய்துகொண்டிருக்கிறேன். சர்வே எண்.426–ல் சர்வே எண்.656, 658 விளைநிலங்கள் குவாரியினால் பாதிக்கப்படும். ஆடு, மாடு மேய்ப்பதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறோம். விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த கல்குவாரியின் அருகில் தண்ணீர் பாய்ச்சும்போது புகையாக வருகின்றது. உரிமையாளரிடம் பலமுறை கூறியும் அவர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாலை நேரங்களில் வெடிவைத்தால் மருந்து அதிகமாகப் பயன்படுத்தி மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. சர்வே எண்.626–ல் நான் வீடு கட்டிக் கொண்டு இருக்கிறேன். வீட்டில் புகை அதிகமாக வருவதால் மூச்சுத் திணறல் அதிகமாக வருகிறது. கால்நடை உபாதைகள் ஏற்பட்டு 5000–த்திற்கும் குறையில்லாமல் விற்க வேண்டிய ஆடுகள், குறைவான விலைக்கு

விற்கப்படுகிறது. எனவே குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது. மீறி அனுமதி வழங்கினால் ஆதார் கார்டையும், ரேசன் கார்டையும் ஒப்படைத்து போராடுவேன் என்றுகூறுகிறேன்.

31. <u>செல்வி.S.ரேவதி, புளியம்பட்டி:</u>

அனைவருக்கும் வணக்கம். நான் புளியம்பட்டியில் இருந்து வருகிறேன். நான் மூன்று பட்டங்கள் முடித்துவிட்டு இப்பொழுது வேலைக்குச் செல்லவில்லை. விவசாயம் செய்து கொண்டுள்ளேன். கால்நடை, விவசாயம், குவாரியினால் பாதிக்கப்படுகிறது. மாலை வெடிவைக்கும்பொழுது இங்குள்ள புற்கள் அனைத்தும் தூசு படிந்து விடுகிறது. அதை உண்பதால் மாட்டிற்கு உணவுகுழாய் நோய் வந்துள்ளது. குவாரி உரிமையாளர் என்ன பதில் கூறுவார். ஆட்சேபனை இல்லை என்று கூறுகிறீர்கள். அனைவருக்கும் தூசு, புகை வருவது தெரிகின்றது. ஆட்சேபனை இல்லை என்று கூறிய அனைவரும் வருங்காலத்தில் சாப்பாடு சாப்பிடுவதற்கு பதிலாக கல், மண் சாப்பிடுவீர்களா ? எனக்கு தெரியவில்லை. நமக்குத் தெரியும். இல்லையென்றால் வராமல் இருக்க வழிகூறவேண்டும். அதனால் நான் குவாரி வேண்டாமென்று ஆட்சேபனை தெரிவிக்கிறேன் என்று கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கருத்துக்களை வீடியோவாகவும், எழுத்துரு மூலமாகவும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். இறுதியாக நாட்டுப்பண் ஒலித்தது. அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர் மாவட்டம்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
கரூர் மாவட்டம்.